# தலைவாசல்

Thalaivaasal

எங்கள் பாரம்பரியம்

வீடு 01 வாசல் 69 | thalaivaasaltv@gmail.com | புதன்கிழமை | டிசம்பர் 09, 2020


## தமிழ்க் கூட்டமைப்பை தடை செய்ய முடியாது

### சி.வி.கே.சிவஞானம்

கூட்டமைப்பை தடை செய்வதென்பது மேலோட்டமான பேச்சே. ஜனநாயக நாட்டில் நினைத்தவாறு ஒரு கட்சியை தடைசெய்ய முடியாது எனத் தெரிவித்திருக்கும் 03

## வலி. கிழக்கு தவிசாளர் நிரோஷிற்கு முன் பிணை



வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ், ஒரு லட்சம் ரூபா பெறுமதியான 2 ஆள் பிணை முறியில் எதிர்பார்க்கை பிணையில் விடுவித்து மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் விடுவித்தது.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் நிரோஷ் மீதான குற்றச்சாட்டு வழக்கை பொலிஸார் முன்னெடுக்கும் 03

## ஒருவரையும் விடுவிக்க முடியாது

### அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை



"இலங்கையில் அரசியல் கைதிகள் எவரும் இல்லை. அவர்களை விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கை ஏற்புடையதல்ல."

இவ்வாறு அமைச்சரவை இணைப் பேச்சாளரும் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு 03

## ரயர் வெடித்து விபத்துக்குள்ளானது கார் இருவர் பலி; மூவர் படுகாயம்

### தென்மராட்சியில் சம்பவம்



யாழ்.தென்மராட்சி நுணாவில் ஏ9 வீதியில் கார் ஒன்றின் ரயர் வெடித்து விபத்துக்குள்ளானதில் ஆறு வயதுச் சிறுவன் உட்பட இருவர் உயிரிழந்துள்ளதோடு, மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் இன்று முற்பகல் 11.50 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரி நோக்கியப் பயணித்த கார் ஒன்றின் ரயர் வெடித்து, திருத்த வேலைக்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எரிபொருள் தாங்கி 03

## இன்று கொரோனா தொற்று 359

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான மேலும் 359 பேர் இன்று(09) இனங்காணப்பட்டுள்ளதாக சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து, இலங்கையில் தொற்றாளர்களின் எண்ணிக்கை 29, 737 ஆக உயர்ந்துள்ளது.

இவர்களில் 316 பேர் பேலியகொட கொரோனா 03

## இலங்கையின் நீதிப் பொறிமுறையில் தமிழருக்கு நம்பிக்கையில்லை

### சர்வதேச விசாரணை கோர இதுவே காரணம் என்கிறார் சுமந்திரன்



"இலங்கையின் நீதிப் பொறிமுறையில் நம்பிக்கையிழந்த காரணத்தாலேயே, சர்வதேச விசாரணையைக் கேட்கின்றோம்."

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இலங்கையில் சிறுபான்மை மக்களுக்கான நீதி நிலைநாட்டப்படுவதில் நீண்டகால இழுத்தடிப்புகள் காணப்படுகின்றன. இதனாலேயே, 03



## அரசியல் கைதிகள் விடுதலையை வலியுறுத்தி

### கஜேந்திரன் உள்ளிட்ட எம்.பிக்கள் குழு மகிந்தவை சந்தித்து மகஜர் கையளிப்பு

சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள 80 இற்கும் மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்சவை, தமிழ் அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு 1994 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து சிறையில் இருக்கும் 80 இற்கும் மேற்பட்ட, தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரியே குறித்த சந்திப்பு 03









தரணி எங்கும் தமிழராய் இணைவோம்

# விசமானது தடுப்பூசி

## இறந்த புறாக்களுக்கு நீதி கோரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

யாழ்.கொக்குவில் பகுதியில் புறா வளர்த்துவந்த நிலையில் சண்டிலிப்பாயை சேர்ந்த ஒருவரினால் அண்மையில் புறாக்களுக்கான தடுப்பூசியை ஏற்றியிருக்கின்றார்.

இதனையடுத்து அவர் வளர்த்து வந்த 115 புறாக்கள் இறந்துள்ளன. இந்நிலையில் புறாக்களை வளர்த்துவந்த நபர் தனக்கு நீதி பெற்றுத்தருமாறுகோரி வழக்கு தாக்கல் செய்திருக்கின்றார்.

குறித்த வழக்கு யாழ்.நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இறந்த புறாவுக்களுக்கான மரணச் சான்றிதழ் அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டதோடு கால்நடை வைத்திய அதிகாரியும் மன்றல் முன்னிலையாக இருந்தார். வழக்கில் முன்னிலையான கால்நடை வைத்திய அதிகாரி இறந்த புறாக்கள் தவறுதலான தடுப்பூசி ஏற்றப்பட்டமையால் உயிரிழந்ததாகவும்





புறாக்கள் இறந்து இரண்டு மணித்தியாலத்துக்குள் பிரேத பரிசோதனை செய்ய வேண்டும் எனவும் கூறினார். எனினும் இரு புறாக்களை பரிசோதித்து ஒட்டுமொத்த புறாக்களுக்குமான

மரணச் சான்றிதழைதான் வழங்கியதாக தெரிவித்த கால்நடை வைத்திய அதிகாரியை சட்டத்தரணி எதிர்தரப்பு சட்டத்தரணி மனிதர் இறந்தால் தனித்தனியாக பிரேத பரிசோதனை செய்யும் வழமை இருக்கிறது

அவ்வாறான நிலையில் 115 புறாக்கள் இறந்ததற்கு ஏன் இரு மருத்துவ அறிக்கைகள் வழங்கினீர்கள் என கேட்டார். வாதங்களைக் கேட்ட நீதிவான் வழக்கை எதிர்வரும் வருடம் சித்திரை மாதம் வரை ஒத்தி வைத்தார்.

---

தலைவாசல் Thalaivaasal எங்கள் பாரம்பரியம்

### தினம் ஒரு ஆரோக்கிய தகவல்

**ஆரோக்கிய வாழ்வுக்கு நித்திரை**

மனதை இலேசாக்கி சாந்தப்படுத்துவதற்கு போதுமான ளவு நித்திரை அவசியமாகும்.

போதுமானளவு நித்திரை இல்லாத போது உடனடி விளைவுகளாக தலைவலி, உடல் பலனற்ற போன்ற உணர்வு இருக்கலாம் காலப்போக்கில் இதயநோய், நீரிழிவு, அதிக உடற்பருமன், உளவியல் பிரச்சனைகள் போன்றனவும் ஏற்படுகின்றன.

நித்திரை வருவதற்காக எவ்வித மருந்துகளையும் பாவிக்க கூடாது . காலப்போக்கில் இது நித்திரை கொள்ளும் ஆற்றலைக் குறைக்கும்.

பாடசாலைக்கு செல்லும் பிள்ளை ஆகக் குறைந்தது 7 மணிநேரமும் வளர்ந்தோர் ஆகக் குறைந்தது 6 மணி நேரமும் தினமும் நித்திரை கொள்ள வேண்டும்.

**வைத்தியகலாநிதி கோ.றஜீவ்**

---

## இனங்களை அடிப்படையாகக் கொண்டு கிழக்கில் கல்வி வலயங்கள்

இனங்களை அடிப்படையாகக் கொண்டு கிழக்கு மாகாணத்தில் கல்வி வலயங்கள் உருவாக்கப்பட்டுள்ளமை தொடர்பாக அறிக்கைகள் கிடைத்துள்ளதாக கல்வியமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அவ்வாறான கருத்திட்டங்களுக்கு அமைய கல்வி வலயங்கள் உருவாக்கப்படுவதற்கு கொள்கை ரீதியாக நாங்கள் இணங்க மாட்டோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்று (செவ்வாய்க்கிழமை) அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸாரப், வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் கல்வி அமைச்சரிடம், பொத்துவில் உப கல்வி வலயம், கல்வி வலயமாக தரமுயர்த்தப்படுமா என எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் கூறுகையில், “உப கல்வி வலயங்களை உருவாக்குவதற்காக இலங்கை கல்விக் கொள்கையில் எவ்வித அனுமதியும் அளிக்கப்பட்டிருக்கவில்லை. அந்தக் கல்விக் கொள்கைகளை நாம் அனுமதிப்பதில்லை என்பதுடன் அதனை முற்றாக நிராகரிக்கிறோம்.

என்றாலும், கிழக்கு மாகாண சபையால் பொத்துவில் உப கல்வி வலயமொன்று நடத்தப்பட்டுச் செல்வதாக அறிக்கைகள் கிடைக்கப்பெற்றுள்ளன. தேசிய மட்டத்தில் உப கல்வி வலயங்கள் அனுமதிக்கப்படவில்லை என்பதால் குறித்த உப கல்வி வலயத்தில் பணிபுரியும் இரண்டு அதிகாரிகளும் இலங்கை நிர்வாக சேவைக்குள் அனுமதிக்கப்படவில்லை.

அதேபோன்று, உப கல்வி வலயங்கள் அனுமதிக்கப்படவில்லை என்பதால் அவ்வாறான உப கல்வி வலயங்களில் உள்ள அதிகாரிகளுக்கு அதிகாரமும் வழங்கப்படாது.



சிறிய தேவைகளுக்காக பொத்துவில் பகுதியில் உள்ளவர்கள் அக்கரைப்பற்றுக்கு செல்ல வேண்டியுள்ளது. இதனால், புதிய கல்வி மறுசீரமைப்புக் கொள்கையில் புதிய தொழில்நுட்பங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன.

கல்வி முகாமைத்தும் மற்றும் நிர்வாக முறைகள் மறுசீரமைக்கப்பட்டுள்ளன. தற்போதுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் வகையில் புதிய கல்வி முகாமைத்துவம் மற்றும் நிர்வாக முறைகள் உருவாக்கப்படும். விரைவாக இந்த வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆகவே, பொத்துவில் பகுதிக்கு தனியான கல்வி வலயமொன்று உருவாக்கப்படாது. இனங்களை அடிப்படையாகக் கொண்டு கிழக்கு மாகாணத்தில் கல்வி வலயங்கள் உருவாக்கப்பட்டுள்ளமை தொடர்பில் அறிக்கைகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அவ்வாறான கருத்திட்டங்களுக்கு அமைய கல்வி வலயங்கள் உருவாக்கப்படுவதற்கு கொள்கை ரீதியாக நாங்கள் இணங்க மாட்டோம்” என்று குறிப்பிட்டுள்ளார்.

---

## பொய் முறைப்பாடு செய்த பெண்ணை கைது செய்ய கட்டளை

பொய் முறைப்பாடு வழங்கியதுடன், குறித்த முறைப்பாடு தொடர்பில் பொலிஸார் பக்க சார்பாக நடந்து கொண்டார்கள் என குற்றம் சாட்டிய பெண் , நீதிமன்றில் வழக்கு விசாரணை நடந்த போது, தனது முறைப்பாட்டை மீள பெறுவதாக மன்றில் கூறியதை அடுத்து குறித்த பெண்ணை கைது செய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் நெல்லியடி பகுதியை சேர்ந்த பெண் ஒருவர் திருமணமாகி கணவரை பிரிந்து வாழ்ந்து வருகின்றார். அந்நிலையில் விவாகரத்து பெறாது , அப்பகுதியை சேர்ந்த முச்சக்கர வண்டி சாரதி ஒருவருடன் சேர்ந்து வாழ்ந்து வந்துள்ளார்.

அந்நிலையில் கடந்த 2019.04.25 ம் திகதி முச்சக்கர வண்டி சாரதி தன்னை பாலியல் ரீதியாக துன்புறுத்தி வருவதாகவும், தாம் இருவரும் நெருக்கமாக இருக்கும் புகைப்படங்களை காட்டி பணம் கேட்டு துன்புறுத்துகின்றார் என நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

குறித்த முறைப்பாடு தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில், தனது முறைப்பாட்டினை பொலிஸார் பக்க சார்பாக விசாரணை செய்வதாக தனக்கிருந்த அரசியல் செல்வாக்கினை பயன்படுத்தி காங்கேசன்துறை பிரிவிற்கு பொறுப்பான சிரேஸ்ட பொலிஸ் அதிகாரியிடம் முறையிட்டார்.

அதனால், சிரேஸ்ட பொலிஸ் அதிகாரியின் கட்டளையின்படி நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் முறைப்பாட்டு பிரிவிற்கு பொறுப்பான பொலிஸ்பரிசோதகர், உப பொலிஸ் பரிசோதகர், பொலிஸ் சார்ஜன் மற்றும் பொலிஸ் கொஸ்தாபல் ஆகியோர் இடம் மாற்றப்பட்டு அவர்களுக்கு ஒழுக்காற்ற நடவடிக்கையும் எடுக்கப்பட்டது.

அதன் பின்னர் குறித்த முறைப்பாடு தொடர்பான வழக்கு விசாரணை பருத்தித்துறை நீதிமன்றில் நடைபெற்று வந்தது. குறித்த வழக்கு நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது , முறைப்பாட்டாளரான குறித்த பெண் நீதிமன்றில் தனக்கு பாலியல் தொல்லை இடம்பெறவில்லை என்றும் தான் தற்போது குறித்த முச்சக்கர வண்டி சாரதியுடன் ஒற்றுமையாக வாழ்கிறேன் என விளக்கமளித்திருந்தார்..

இந்நிலையில் பாலியல்தொல்லை, பாலியல் ரீதியான ஒளிப்படம் எடுத்து அச்சுறுத்தியமை, பொலிசார் பக்கசார்பாக நடந்தமை போன்ற பொய் முறைப்பாடுகளை செய்தமைக்காக அவரை கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றின் நீதிவானால் நெல்லியடி பொலிசாருக்கு கட்டளை இடப்பட்டது.

குறித்த பெண் வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவரின் மகளாவார். அதனூடான செல்வாக்கின் அடிப்படையிலேயே பொலிஸாருக்கு எதிராக பொய் முறைப்பாடு அளித்து பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வைத்திருந்தார். என்பது குறிப்பிடத்தக்கது.

---

## கொரோனாவை குணப்படுத்தும் மருந்து: கேகாலைக்கு பெரும் ஆபத்து!

கொரோனாவை குணப்படுத்தும் மருந்து என அறிவிக்கப்பட்டு வழங்கப்பட்ட மருந்தினை பெறுவதற்காக ஒரே இடத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் குழுமியதால் கேகாலைக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்ணாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

முழு கேகாலைக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது என தெரிவித்துள்ள அவர், கொரோனா விதிமுறைகள் மீறப்பட்டிருந்தால் பொலிஸார் நடவடிக்கை எடுப்பார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் மிகப்பெரிய ஆபத்தான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என குறிப்பிட்டுள்ள அவர், இந்த மருந்து கொரோனாவை குணப்படுத்தக்கூடியது என்பது இன்னமும் விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்படவில்லை எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

சோதனைகள், ஆய்வுகள் இடம்பெறுகின்றன என்றும் இந்த மருந்து கொரோனாவை குணப்படுத்தக்கூடியது என்பது நிரூபிக்கப்பட்டால் தாம் பொதுமக்களிற்கு அறிவிப்போம் என்றும் அதுவரை பொது மக்கள் பொறுமையாக இருக்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸிற்கான எந்த மருந்தும் விஞ்ஞான ரீதியிலான ஆய்விற்கு உட்படுத்தப்படவேண்டியது அவசியம் என குறிப்பிட்டுள்ள அவர், இந்த மருந்து இன்னமும் ஆய்விற்கு உட்படுத்தப்படவில்லை, ஆகவே மக்கள் மருந்துகளை பயன்படுத்துவதற்கு முன்னர் எச்சரிக்கையுடன் செயற்படவேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் இந்த நெருக்கடியான தருணத்தில் எச்சரிக்கையுடன் செயற்படாவிட்டால் அதனால் அவர்களின் உயிர்களுக்கு ஆபத்து ஏற்படலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

## நடிகர் சரத்குமாருக்கு கொரோனா!



நடிகர் சரத் குமாருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து நடிகையும், அவரது மனைவியுமான ராதிகா சரத்குமார் ருவிட்டரில் தெரிவிக்கையில், “ஹைதராபாத்தில் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளார் சரத் குமார்.

அவருக்கு அறிகுறிகள் எதுவும் இல்லை. திறமையான மருத்துவர்களின் கண்காணிப்பில் உள்ளார். அவருடைய உடல்நலன் குறித்து வரும் நாட்களில் தகவல் தெரிவிக்கிறேன்” எனக் கூறியுள்ளார்.

## அவுஸ்ரேலிய காட்டுத்தீயில் 60,000 கோலா கரடிகள் உயிரிழப்பு!

அவுஸ்ரேலியாவில் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் ஏற்பட்ட காட்டுத் தீயில் 60,000 கோலா கரடிகள் உயிரிழந்துள்ளதாக உலகளாவிய நிதி அமைப்பு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து உலகளாவிய நிதி அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

‘அவுஸ்ரேலியாவின் கிழக்குப் பகுதியில் காடுகள் அடர்ந்த 10 மில்லியன் ஹெக்டேர் பகுதியில் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் காட்டுத் தீ பரவியது. இதில் 2,000 வீடுகள் எரிந்தன. 28 பேர் இறந்தனர்.

இந்த காட்டுத் தீயில் அரிய வகை விலங்குகள் உட்பட லட்சக்கணக்கான வனவிலங்குகள் உயிரிழந்தன. தொடர்ந்து 3 மாதங்களுக்கு மேல் காட்டுத் தீ பற்றி எரிந்தது. இதில் 3 பில்லியனுக்கும் அதிகமான விலங்குகள் உயிரிழந்தன. கோலா கரடிகள், கங்காருகள் அதிக அளவில் உயிரிழந்துள்ளன. இதில் கோலா கரடிகள் மட்டும் 60,000 எண்ணிக்கையில் இறந்துள்ளன’ என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலியாவில் 3 லட்சத்துக்கும் அதிகமான கோலா கரடிகள் உள்ளன. இந்த நிலையில் அங்கு ஏற்பட்ட காட்டுத் தீ காரணமாக இந்த எண்ணிக்கை பெருமளவு குறைந்துள்ளது என்று அந்நாட்டு விலங்குகள் நல ஆர்வலர்கள் வருத்தம் தெரிவித்துள்ளனர்.

## முகத்தில் 2 இடங்களில் காயம் கொலை செய்யப்பட்டாரா சித்ரா? போலீஸ் தீவிர விசாரணை



தற்கொலை செய்து கொண்டதாக கூறப்படும் நடிகை சித்ராவின் முகத்தில் 2 இடங்களில் காயம் உள்ளது. வலது பக்க கன்னத்திலும், நாடி பகுதியிலும் காயங்கள் உள்ளன. இதுபற்றி போலீசாரிடம் கேட்ட போது, இந்த காயங்கள் எப்படி ஏற்பட்டன என்பது பற்றியும் விசாரணை நடத்தி வருவதாக தெரிவித்தனர்.

தற்கொலை செய்த போது அறையில் சித்ராவின் வருங்கால கணவரான ஹேம்நாத் மட்டுமே உடன் இருந்துள்ளார். அவரிடம் விசாரணை நடத்தி வருகிறோம். சித்ரா தற்கொலை செய்து கொள்வதற்கு முன்பு ஹேம்நாத்திடம் கருத்து வேறுபாடு காரணமாக தகராறில் ஈடுபட்டதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. இதுபற்றியும் ஹேம்நாத்திடம் போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

சித்ரா கொலை செய்யப்பட்டு இருக்கலாமோ என்கிற கோணத்திலும் விசாரணை நடைபெறுகிறது. பிரேத பரிசோதனையில் தான் சித்ரா மரணம் அடைந்தது எப்படி? என்பது உறுதியாக தெரியவரும் என்று போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இலங்கையின்...

மோசமான குற்றங்களுக்கு நீதியைப் பெற்றுக்கொள்ள சர்வதேச நீதிமன்ற தலையீட்டைக் கொண்ட விசாரணைகளைக் கேட்கின்றோம்.

இலங்கையின் நீதித்துறை சுயாதீனமாக இல்லை என்பதை ஆட்சி செய்தவர்களும், ஆட்சி செய்கின்றவர்களும் முன்வைக்கும் விமர்சனங்களில் இருந்தே வெளியாகி விட்டன.

நாட்டில் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதில்லை. எமது மக்களின் பிரச்சினைகள் வேறு ஒரு கோணத்தில் இருந்தே பார்க்கப்படுகின்றது.

அண்மைக்காலமாக சிறுபான்மை மக்களின் பிரச்சினைகள் மேலெழுகின்றபோது, நீதி அமைச்சர் ருவிட்டர் மூலமாக கருத்துக்களைக் கூறுவதை மட்டுமே செய்து வருகின்றார். அதனை மாத்திரமே அவரால் செய்ய முடியும்.

சிறைச்சாலைகளில் 1983, 2000 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில், அரச பாதுகாப்புடன் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் குறித்த விசாரணைகள், இன்னமும் முன்னெடுக்கப்படவில்லை. இந்தநிலையில், தற்போது மஹர சிறைச்சாலையிலும் படுகொலை அரங்கேற்றப பட்டுள்ளது.

திருகோணமலையில் 5 மாணவர்கள் படுகொலை, கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், சிவநேசன், ரவிராஜ் மற்றும் ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க போன்றோரின் படுகொலைகள், ஊடகவியலாளர் கீத் நோயர் கடத்தப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்ட சம்பவம், ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டுக் காணமால் ஆக்கப்பட்ட சம்பவம், 34 தமிழ் ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் ஆகியவற்றுக்கு இன்னமும் நீதி நிலைநாட்டப்படாதது ஏன்?

நாட்டில் மோசமான, சர்வதேச குற்றங்கள் பல இடம்பெற்றுள்ள காரணத்தாலேயே சர்வதேச விசாரணைகளைக் கேட்கின்றோம். அதனை ‘வேண்டாம்’ எனக் கூற முடியாது” - என்றார்.

### வலி. கிழக்கு...

போது முழுமையான ஒத்துழைப்பை வழவங்குவதுடன், நீதிமன்றில் தவறாது முன்னிலையாக வேண்டும் என்று உத்தரவிட்டது.

பிரதேச சபைக்கு சொந்தமான அச்செழு அம்மன் கோவில் வீதியில் பிரதேச சபையின் தீர்மானமின்றி சட்டத்திற்கு முரணாக அடிக்கல் நடப்பட்டு காட்சிப் பதாகையும் அமைக்கப்பட்டிருந்தது. குறித்த காட்சிப் பதாகையினை தவிசாளர் அகற்றி இருந்தார். இதனால் மத்திய அரசுக்கும் உள்ளூராட்சி அதிகார அலகுக்கும் இடையில் பிணக்கு ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த விளம்பரப்பதாகை அகற்றப்பட்டமை தொடர்பில் தவிசாளர் நிரோஷ் பொது உடமைக்கு சேதம் விளைவித்தார் எனக் குற்றம்சாட்டி கடந்த திங்கட்கிழமை முதல் கைது செய்வதற்கு அச்சுவேலி பொலிஸார் தீவிரமாக முயன்று வருகின்றார்கள்.

இதனையடுத்து நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மல்லாகம் நீதவான் நீதிமன்றில் எதிர்பார்க்கை பிணை கோரி மனுத்தாக்கல் செய்திருந்தார்.

ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் ஆலோசனைகளுடன் சட்டத்தரணிகளான வி. திருக்குமரன் மற்றும் வி. மணிவண்ணன் உள்ளிட்ட சட்டத்தரணிகள் இந்த எதிர்பார்க்கை பிணை விணப்பத்தை மன்றில் சமர்ப்பணம் செய்திருந்தனர்.

மனுவை ஆராய்ந்த நீதிமன்றம் இன்று அச்சுவேலி பொலிஸாரையும் மன்றில் தோன்றுமாறு தெரிவித்து மனு மீதான விசாரணையை ஒத்தி வைத்திருந்தது.

இந்த விண்ணப்பம் மீதான விசாரணை இன்று மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது விண்ணப்பதாரர் தியாகராஜா நிரோஷூக்கு எதிரான வழக்கு தாக்கல் செய்யப்பட்டத்தை பொலிஸார் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் விண்ணப்பதாரர் சார்பில் முன்னிலையான மூத்த சட்டத்தரணி வி.திருக்குமரன், எதிர்பார்க்கை பிணைக்கான காரணத்தை எடுத்துரைத்தார்.

அதனால் விண்ணப்பதை ஏற்றுக்கொண்ட நீதிமன்று, எதிர்பார்க்கை பிணையை வழங்கி கட்டளையிட்டது.

### ஒருவரையும்...

காணொளி தொழில்நுட்பம் மூலம் நடைபெற்றது. இதன்போது தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

“தாம் வகிக்கும் அரசியல் நிலைப்பாட்டால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களையே அரசியல் கைதிகள் என விளிக்க முடியும். இலங்கையில் அரசியல் கைதிகள் இல்லை. எனவே, அரசியல் கைதிகளின் எண்ணிக்கை பூஜ்ஜியம், சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் எண்ணிக்கையும் பூஜ்ஜியம் என்ற பதிலையே வழங்க முடியும்.

இலங்கையில் கருத்துச் சுதந்திரம் இருக்கின்றது. அது அடிப்படை உரிமையாகவும் அரசமைப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த விடயத்தை மையப்படுத்தி எவரும் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்படவில்லை.

பயங்கரவாதக் குற்றச்சாட்டின் அடிப்படையில்தான் நீங்கள் கூறும் நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஆக, அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்ற விடயம் ஆளுந்தரப்பில் ஏற்புடைய காரணியல்ல.

அதேவேளை, குற்றச்சாட்டுக்களின் தன்மை அடிப்படையிலேயே கைதிகள் வகைப்படுத்தப்படுகின்றனர். எனவே, தமிழ்க் கைதிகள், முஸ்லிம் கைதிகள், சிங்களக் கைதிகள் எனக் கைதிகளை இன ரீதியில் வகைப் படுத்தக்கூடாது.

தண்டனை குறைப்பு, பொதுமன்னிப்பு என்று அனைத்து விடயங்களும் எல்லாக் கைதிகளுக்கும் பொருந்தும்” - என்றார்.

### இன்று கொரோனா...

கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் என்றும் 43 பேர் சிறைச்சாலை கொரோனா கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ரயர் வெடித்து...

வாகனம் மீது மோதி விபத்துக்குள்ளானது.

சம்பவநேரத்தில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு சிறுவர்கள் உட்பட ஐவர் காரில் பயணித்துள்ளனர்.

இதன்போது ஏற்பட்ட விபத்தில் அவர்களில் ஆறு வயதுடைய சிறுவனான யோகதாஸ் மகிழன் மற்றும் 30 வயதுடைய பெண்ணான திருமதி ஆன் டேரோளினி ஆகியோர் உயிரிழந்துள்ளார்.

ஏனையவர்கள் மூவரும் படுகாயமடைந்த நிலையில், யாழ்.போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

6 வயது சிறுவனான ஆன் மக்கிலியோட் தலைக் காயம் காரணமாக தீவிர சிகிச்சை பிரிவிலும்

லேபோனியா என்ற பெண் காயம் காரணமாக அவசர சிகிச்சை பிரிவிலும் 35 வயது பெண்ணான கரோலின்

நெற்றி கைகள் ஏற்பட்ட சிறு காயம் காரணமாகவும் சிகிச்சை பெற்று வருகிறார்.

### தமிழ்க் கூட்டமைப்பை...

வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தடைசெய்தாலும் தாம் தமது கொள்கைகளை முன்னிறுத்தி வேறு கட்சியில் போட்டியிடுவோம் என தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் இன்று(புதன்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர், “தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் அனைத்துக் கட்சிக் கூட்டத்தின் முதல் இரு கூட்டங்களில் கலந்து கொண்டனர்.

பின்னர் அவர்கள் வரவில்லை. அவர்கள் புறக்கணிக்கிறார்களா? அல்லது வரவில்லையா என்பதை அவர்களிடம் தான் கேட்க முடியும். அவர்களுக்குரிய அறிவித்தல் முறையாகவே கிடைக்கின்றது.

நாடாளுமன்றில் 13 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒத்திசைவாகவே செயற்படுகின்றனர். சாணக்கியன், விக்கினேஸ்வரன், கஜேந்திரகுமார் போன்றவர்கள் கூட பொது இலக்கில் செயற்படுகின்றனர்.

கஜேந்திரகுமார், விக்னேஸ்வரன், சுமந்திரன், சிறிதரன், சாணக்கியன் போன்றோர் சபைகளில் ஆவேசமாக பேசுகின்றனர். முன்னர் அடக்கிவாசித்தார்கள். நாட்டில் அடக்குமுறை அதிகரித்ததால் அவர்களும் ஆவேசமடைந்துள்ளனர்.

கஜேந்திரகுமார், சாணக்கியன் போன்றோர் சரத் வீரசேகரவிற்கு எதிராக நாடாளுமன்றில் பதிலளிக்கும் போதே கூட்டமைப்பை தடைசெய்ய வேண்டும், புனர்வாழ்வு அளிக்கப்பட வேண்டும் என கூறப்பட்டது. இதற்கு பொன்சேகாவும் தனது கடும் எதிர்பை வெளியிட்டிருந்தார்.

கூட்டமைப்பை தடை செய்வதென்பது மேலோட்டமான பேச்சே. ஜனநாயக நாட்டில் நினைத்தவாறு ஒரு கட்சியை தடைசெய்ய முடியாது. தடைசெய்தாலும் நாம் எமது கொள்கைகளை முன்னிறுத்தி வேறு கட்சியில் போட்டியிடுவோம்“ எனக் குறிப்பிட்டுள்ளார்.

### அரசியல் கைதிகள்...

இடம்பெற்றுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான சார்ள்ஸ் நிர்மலநாதன், தவராசா கலையரசன், எஸ்.வினோநோகராதலிங்கம் மற்றும் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்டவர்கள் பிரதமரை இன்று சந்தித்திருந்தனர்.

இதன்போது தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரி இரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன், சி.வி.விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மனோ கணேசன், சிவஞானம் சிறீதரன், செல்வம் அடைக்கலநாதன், த.சித்தார்த்தன், சார்ள்ஸ் நிர்மலநாதன், எஸ்.வினோநோகராதலிங்கம், செல்வராசா கஜேந்திரன், வே.இராதாகிருஷ்ணன், இரா.சாணக்கியன், கோவிந்தன் கருணாகரம் மற்றும் தவராசா கலையரசன் உள்ளிட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்ட கடிதமும் பிரதமரிடம் கையளிக்கப்பட்டது.

# ஊழலை அழிப்பதே எமது அரசாங்கத்தின் தலையாய பொறுப்பு



வெறுக்கத்தக்க செயற்பாடுகளை எதிர்த்து போராடுவதே ஊழலை தோற்கடிப்பதற்கான சிறந்த ஆயுதம் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வீண் விரயம் மற்றும் ஊழலை அழிப்பது தமது அரசாங்கத்தின் தலையாய பொறுப்பாக கருதுவதாகவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

சர்வதேச ஊழல் ஒழிப்புத் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

ஊழலுக்கு எதிரான போராட்டத்தில் நாட்டு மக்களை வலுவூட்ட சுபீட்சத்தின் நோக்கு கொள்கையில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி இதன்போது கூறியுள்ளார்.

வீண் விரயம் மற்றும் ஊழலை அழிப்பது தமது அரசாங்கத்தின் தலையாய பொறுப்பாக கருதுவதாகவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

பெரும்பான்மை பலத்துடன் தனது வெற்றியை ஆதரித்தபோது ஊழல் இல்லாத வினைத்திறனான நாட்டிற்காக தங்களின் விருப்பத்தினையும் வலுவான ஆதரவினையும் நாட்டு மக்கள் வழங்கியதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இலஞ்ச ஊழல் பற்றிய சம்பவங்களை விசாரணை செய்யும் அதிகாரிகளுக்கு உடனடியாக அறிவிப்பதன் ஊடாக குடிமக்களுக்கான கடமையை உரிய வகையில் மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார்.

ஊழல் கலாசாரத்தில் இருந்து நாட்டை விடுவித்து ஒரு சிறந்த தேசத்தை அடுத்த தலைமுறையினரிடம் கையளிக்க அனைவரும் ஒன்றுபட வேண்டும் எனவும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

## கொழும்பு தேசிய வைத்தியசாலையின் சமையலறையில் பணியாற்றிய 14 பேருக்கு கொரோனா



கொழும்பு தேசிய வைத்தியசாலையின் சமையலறையில் பணியாற்றிய 14 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அந்த வளாகத்தை முழுமையாக தொற்று நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், தொற்று உறுதியான பணியாளர்கள் தனிமைப்படுத்தலுக்காக அனுப்பப்பட்டுள்ளனர்.

அத்துடன் தொற்று உறுதியானவர்களுடன் தொடர்பினை பேணியவர்களும் கண்டறியப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

அதேநேரம் சமயலறையின் நடவடிக்கையை முன்னெடுத்து செல்வதற்காக இன்று முதல் பிரிதொரு தரப்பினரை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவை சூழ்ந்த பனிமூட்டம்!




வவுனியா நகர்ப்புறம் உட்பட அனைத்து இடங்களிலும் இன்று (புதன்கிழமை) அதிகாலை 8.00 மணிவரை அதிகளவான பனி மூட்டம் காணப்பட்டது.

இதன் காரணமாக வேலைக்கு செல்வோர், வாகனச் சாரதிகள் எனப் பலரும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

ஏ-9 வீதி உட்பட வவுனியாவில் வீதியால் சென்ற வாகனங்கள் காலை 8 மணிவரை ஒளியைப் பாய்சியபடி சென்றதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

அண்மைக்காலமாக குளிருடன் கூடிய காலநிலை வவுனியாவில் காணப்பட்ட போதிலும் இன்றைய நிலை போன்றதான பனிமூட்டம் காணப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## கிழக்கில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 419ஆக அதிகரிப்பு



கிழக்கு மாகாணத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 400ஐ தாண்டியுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர், வைத்தியர் அழகையா லதாகரன் தெரிவித்துள்ளார்.

அந்தவகையில், நேற்று (செவ்வாய்க்கிழமை) மாலை வரையில் கிடைக்கப்பெற்ற பி.சி.ஆர். பரிசோதனைகளில் 17 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ள நிலையில் இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று பொதுச்சந்தையுடன் தொடர்புபட்டவர்களாக அக்கரைப்பற்றில் 12பேரும் ஆலையடிவேம்பில் மூவர் இனங்காணப்பட்டுள்ளதுடன் திருகோணமலை மாவட்டத்தின் உப்புவெளி பகுதியில் இருவர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் கிழக்கு மாகாணத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 419ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, அக்கரைப்பற்று பொதுச்சந்தையுடன் தொடர்புபட்டவர்களில் இதுவரையில் 256பேருக்கு கொரனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக வைத்தியர் லதாகரன் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய நிலையினை உணராமல் சிலர் செயற்படுவதாகவும் இதன்காரணமாக ஏனையவர்களும் பாதிக்கப்படும் நிலையேற்படுவதாகவும் மாகாண சுகாதார பணிப்பாளர் தெரிவித்தார்.

இந்நிலையில், சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றாதவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பாதுகாப்புத் தரப்பினருடன் இணைந்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

## கொரோனா தொற்று 29,000ஐ கடந்தது!



நாட்டில் மேலும் 797 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு, தொற்று கண்டறியப்பட்டவர்களில் 567 பேர் பேலியகொட மீன் சந்தைக் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஏனைய 230 பேரும் சிறைச்சாலைக் கொத்தணியைச் சேர்ந்தவர்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 9 ஆயிரத்தைக் கடந்து 29 ஆயிரத்து 378ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்து இன்று 454 பேர் வீடுகளுக்குத் திரும்பியுள்ள நிலையில் இதுவரை 21 ஆயிரத்து 258 பேர் தொற்றிலிருந்து மீண்டுள்ளனர்.

இந்நிலையில், இன்னும் ஏழாயிரத்து 978 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## வெள்ளத்தால் இடம்பெயர்ந்து வீடு திரும்பியோருக்கு பாம்புக்கடி

யாழ்.கல்லுண்டாய் குடியிருப்பு பகுதியில் பாம்பு கடிக்கு இலக்கான இருவர் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

குறித்த குடியிருப்பு பகுதியில் கனமழை மற்றும் மழை வெள்ளத்தினால் மக்கள் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் தங்கியிருந்தனர். தற்போது வெள்ளம் சிறிதளவு வற்றிய நிலையில் மக்கள் தங்கள் வீடுகளுக்கு பகுதி பகுதியாக திரும்பி சென்று கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறு வீட்டுக்கு சென்ற பெண் ஒருவர் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்தபோது நேற்றிரவு 11 மணியளவில் பாம்பு கடித்துள்ளது. உடனடியாக அவரை வைத்திய சாலைக்கு கொண்டு சென்ற நிலையில் கடித்த பாம்பை கொண்டுவருமாறு வைத்தியசாலையில் கூறப்பட்டுள்ளது.

இதனையடுத்து பாம்பை பிடிக்க முயற்சித்த அயல் வீட்டை சேர்ந்த வருக்கும் பாம்பு தீண்டியுள்ளது. அவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வீடுகளைச் சுற்றி வெள்ளநீர் தேங்கி நிற்பதாலேயே பாம்புகள் அங்கு வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

## கொரோனா மரணம் 142ஆக உயர்வு!

இலங்கையில் கடந்த 24 மணித்தியாலங்களில் வைரஸ் தொற்றுக்கு உள்ளான மேலும் 798 பேர் புதிதாக அடையாளம் காணப்பட்டனர்.

இதனையடுத்து நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 29 ஆயிரத்து 377 ஆக அதிகரித்துள்ளதாக கொவிட்-19 பரவல் தடுப்பு செயற்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட இடங்களின் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அதன்படி கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த 526 பேரும் கம்பஹா மாவட்டத்தில் 97 பேரும் களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்த 53 பேரும் அடையாளம் காணப்பட்டனர்.

மேலும் வெளிநாட்டில் இருந்து வந்த ஒருவரும் கொவிட் தொற்றாளராக இனங்காணப்பட்டுள்ளார்.

இதேவேளை, மினுவாங்கொடை மற்றும் பேலியகொடை கொத்தணியில் வைரஸ் தோற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 25 ஆயிரத்து 818 ஆக அதிகரித்துள்ளது.

இதேநேரம் கடந்த 24 மணித்தியாலங்களில் 454 பேர் குணமடைந்து வைத்தியசாலையில் இருந்து வீடு திரும்பியுள்ளதாக கொவிட்-19 பரவல் தடுப்பு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 21 ஆயிரத்து 258 ஆக உயர்வடைந்துள்ளது.

இந்த நிலையில் தொற்றுக்கு உள்ளான 7 ஆயிரத்து 978 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

இதேநேரம் இலங்கையில் இதுவரையில் 142 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.